www.tamilarangam.net

Tuesday 26th January



இனியொரு..மாற்று அரசியலுக்கான உரையாடல் வெளி

Click : BookMark inioru



# பற்குணம் – இரண்டாவது உட்படுகொலை – ஈழப் போராட்டத்தில் எனது பதிவுகள் (பகுதி ஐந்து) : ஐயர்

தமிழ்மணம் பரிந்துரை : 2/3

Pathivu Toolbar ©2010thamizmanam.com



சில மாதங்கள் இடைவெளியில் இருவேறு தாக்குதல் வெற்றிகரமாக நடத்தப்பட்டுவிட்டன. இவையெல்லாம் எமது இரத்ததில் புதிய நம்பிக்கை அணுக்களை உருவாக்கியிருந்தது.

www.tamilarangam.net

அனைவருக்கும் அதீத உற்சாகம் பொங்கியது. தமிழீழம் மிக அண்மையில் எட்டிவிடும் தூரத்திலேயே இருப்பதாக உணர்கிறோம்.

தனிமனிதப் படுகொலைகள் என்றாலும் உணர்ச்சியின் உந்துதலுக்கு உட்படுத்தப்பட்ட எமக்கெல்லாம் அவை தாக்குதல்கள் தான். மக்கள் போராட்டங்கள் பற்றியும் அதற்கான அரசியல் வழிமுறை பற்றியும் அறிந்து வைத்துக்கொண்டா இவற்றைத் திட்டமிட்டோம்!

எமது தோளில் புதிய சுமையை உணர்கிறோம். பற்குணமும் இணைந்துகொள்ள விரிவாக்கப்பட்ட மத்திய குழு ஒன்று கூடல்களை பல தடவை நிகழ்த்துகிறோம். ஒரு புறத்தில் உற்சாகத்தில் மக்கள் மக்கள் திளைத்திருக்க மறுபுறத்தில் நாமும் எமது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தல் குறித்து ஆராய்ந்து கொண்டிருந்தோம்.



பற்குணம் இந்தியாவில் வாழந்த வருடங்களில் ஈழப் புரட்சி அமைப்பு என்ற ஈரோஸ் (EROS) உடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தார். அருளர் என்ற அருட்பிரகாசத்துடன் ஏற்பட்ட தொடர்புகளூடாக அரசியல் விடயங்களில் அக்கறை உடையவராகவும் அதே வேளை ஈரோஸ் அமைப்பின் அனுதாபியாகவும் கூட மாற்றமடைந்திருந்தார்.

எமது மத்திய குழுக் கூட்டங்களில் பிரபாகரனுக்கும் பற்குணத்திற்கும் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. பிரபாகரனிற்கு அரசியல் விடயங்களில் அக்கறை இல்லை, எமக்கு என்று அரசியல் நிலைப்பாடும் அரசியல் வழிநடத்தலும் தேவை என்ற கருத்தைப் பற்குணம் முன்வைக்கிறார். பிரபாகரனைப் பொறுத்தவரை பலமான ஒரு இராணுவக் குழு தேவை என்பதே பிரதான நோக்கமாக இருந்தது. இந்த விவாதங்கள் எல்லாம் ஒரு குறித்த காலத்தின் பின்பாக, குறிப்பாக மத்திய குழு விவாதங்களின் போது பிரபாகரனுக்கும் பற்குணத்திற்கும் இடையிலான முரண்பாடாக எழுகிறது. பிரபாகரன் அரசியலற்ற வெறும் இராணுவச் சிப்பாய் போலச் செயற்படுவதாகவும் , ஒரு விடுதலை இயக்கத்தை வழி நடத்தத் தகமையற்றவர் என்ற கருத்தையும் கூட்டங்களில் முன்வைக்கிறார். இதற்குப் பிரபாகரனிடம் பதில் இருக்கவில்லை.

அதே வேளை பற்குணம் புகைப்பிடிகும் பழக்கததைத் தவிர சந்தர்ப்பங்களில் மதுபானம் அருந்தும் பழக்கததையும் கொண்டிருந்தார்.தவிர, இந்தியாவிலிருந்து திரும்பியதும் இந்தியாவில் பெண்களுடன் தொடர்புகள்



கொண்டிருந்ததாகவும் எமக்கெல்லாம் கூறினார். மத்திய குழுக் கூட்டங்களில் பிரபாகரன் இது குறித்து விவாதங்களை முன்வைக்காவிட்டாலும், அதற்கு வெளியில் எம்மைத் தனித்தனியாகச் சந்தித்து, பலதடவைகள் பற்குணத்தின் இயல்புகள் குறித்து எம்மிடம் குறைகூறுவது வழமை.பற்குணம் ஒழுக்கமற்றவர் என்பதைப் பிரபாகரன் எம்மிடம் கூறுவார்.

www.tamilarangam.net

பிரபாகரனைப் பொறுத்தவரை தேனீர், கோப்பி போன்றவற்றை கூட அருந்தாத தூய ஒழுக்கவாதியாகவே காணப்பட்டார். அவரைப் பின்பற்றிய எம்மில் பலர் இந்த ஒழுக்கவாதத்தை கடைப்பிடித்திருந்தனர்.

பிரபாகரன் மீதிருந்த தனிமனிதப்பற்று என்பது பற்குணம் கூறுவதை ஏற்கத் தடையாக இருந்தது. பிரபாகரனுக்கும் பற்குணத்திற்கும் இடையில் நிகழும் விவாதத்தில் நாமெல்லாம் மௌனம் சாதித்தாலும் பிரபாகரனை இந்தியாவிலிருந்து திடீரென வந்த பற்குணம் குறைகூறுவது எமக்கெல்லாம் நியாயமாகப்படவில்லை.

பற்குணத்தின் ஊடாக மன்னார் வீதியில் அமைந்திருந்த கன்னாட்டி என்னும் இடத்தில் ஈரோஸ் அமைப்பினர் ஒரு பண்ணை ஒன்றை நடத்திவருவதாக அறிந்தோம். எம்மைப் போலவே சில புதிய உறுப்பினர்களைப் பயிற்றுவிக்கும் இடைநிலை முகாமாகவிருந்த கன்னாட்டிப் பண்ணையிலிருந்த ஈரோஸ் உறுப்பினர்களுடன் எமக்குத் தொடர்புகள்



ஏற்படுகிறது. அவ்வேளையில் சங்கர் ராஜி, அருளர்,அந்தோனி என்ற அழகிரி போன்ற ஈரோசின் முக்கிய உறுப்பினர்கள் அங்கு தங்கியிருந்தனர். பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் தொடர்புகளைக் கொண்டிருந்த இவர்களில் சில உறுப்பினர்கள் அவர்களிடம் பயிற்சியையும் பெற்றிருந்தனர்.

சில நாட்களுக்கு உள்ளாகவே எமது பூந்தோட்டம் முகாமிற்கு அவர்கள் வருவதும், நாங்கள் அவர்களது முகாமிற்குச் செல்வதுமாக ஒரு நட்பு வளர்ந்திருந்தது. பற்குணம் இது குறித்து மகிழ்ச்சியடைந்திருந்தாலும், எமது இயக்கத்திற்கும் அரசியல் நடைமுறைகள் தேவை என்பதையும், அரசியலற்ற பிரபாகரன் தலைமைக்குத் தகுதியற்றவர் என்பதையும் தொடர்ச்சியாக வலியுறுத்திவந்தார்.

ஈரோஸ் இயக்கத்தினர் எமது பூந்தோட்டம் பண்ணைக்கு வந்து எம்மோடு உரையாடல்களை நடத்துவார்கள். பெரும்பாலும் இராணுவ நடவடிக்கைகள், தாக்குதல்கள், பயிற்சி, துப்பாக்கி சுடுதல் போன்ற விடயங்களை நாங்கள் பேசிக்கொள்வோம். 1977 பொதுத் தேர்தலுக்குச் சில காலங்களின் முன்னர் சங்கர் ராஜி என்ற பலஸ்தீன விடுதலை இயக்கத்தில் பயிற்சி பெற்ற ஈரோஸ் உறுப்பினர் எமது முகாமிற்கு வந்திருந்த போது ஒரு சுவாரசியமான சம்பவம் நிகழ்ந்தது. பிரபாகரனோடு சங்கர் ராஜி, பலஸ்தீன விடுதலை இயக்கம் பயிற்சிகள் குறித்துப் பேசிக்கொண்டிருந்தனர். அரசியல் விவகாரங்களில் பிரபாகரன் ஆர்வம் காட்டவில்லை. எமக்கு அருகே இருந்த சிறிய இலக்கு ஒன்றை குறிவைத்துச் சுடுமாறு சங்கர் ராஜியிடம் பிரபாகரன் கேட்க, அவரும் அவ்வாறே சுடுகிறார். குறி தவறி வேறு இடத்தில் சூடு படுகிறது. துப்பாக்கியை வாங்கிக்கொண்ட பிரபாகரன் அதே இலக்கைக் குறிவைத்துச் சுடுகிறார். குறி தப்பவில்லை. இலக்கில் நேரடியாகச் சென்று குண்டு துளைத்ததும், ஈரோஸ் இயக்கதிலிருந்து எமது பண்ணைக்கு வந்த அனைத்து விருந்தினர்களும் ஆச்சரியப்பட்டுப் போகிறார்கள்.

www.tamilarangam.net

வங்கிக் கொள்ளை நிகழ்த்தியிருந்த நாம் ஒப்பீட்டளவில் ஈரோஸ் இயக்கத்தை விட வசதி வளங்களைக் கொண்டவர்களாக இருந்தோம். பற்குணதின் சிபார்சின் பேரில் ஈரோஸ் அமைப்பிற்குப் பண உதவி செய்வதென்ற கருத்தை எமது மத்திய குழுவைக் கூட்டி விவாதிக்கிறோம். இறுதியில் பிரபாகரனும் அவர்கள் நட்பு சக்திகள் என்ற அடிப்படையில் ஒரு குறித்த பணத் தொகையை வழங்க வேண்டும் என்று முன்மொழிய நாங்களும் அதை ஒத்துக்கொள்கிறோம். இந்த முடிவின் அடிப்படையில் ஈரோஸ் அமைப்பிற்கு 50 ஆயிரம் ரூபா வரையிலான பணம் வழங்கப்படுகிறது. பிரபாகரனுக்கோ எமக்கோ இலங்கை அரசிற்கு எதிரான இன்னொரு இயக்கம் வளர்வதில் எந்த பய உணர்வோ, காழ்ப்புணர்வோ அன்றைய சூழலில் இருந்ததில்லை.

பேபி சுப்பிரமணியம் , தங்கா போன்றவர்களூடாக, தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த அமிர்தலிங்கம், மாவை சேனாதிராஜா போன்றவர்களுன் இறுக்கமான தொடர்புகள் ஏற்படுகின்றன. சேனாதிராஜா



தான் முதலில் எமக்குக் ஏற்பட்ட கூட்டணியின் முதல் நம்பிக்கையான தொடர்பு. அவரினுடாக அமிர்தலிங்கத்தின் தொடர்பு ஏற்படுகிறது. சேனாதிராஜா வீட்டிற்கும், அமிர்தலிங்கத்தின் வீட்டிற்கும் பிரபாகரன் வேறு உறுப்பினர்களோடும் தனியாகவும் செல்வது வழமையாகிவிட்டது. தவிர, மத்திய குழு சார்பிலான சந்திப்புக்கள் நடைபெறவில்லை. பின்னதாக நான் இலங்கைக்குத் திரும்பிச் சென்றதும், மத்திய குழுவுடனான சந்திப்பு ஒன்று நிகழ்கிறது. அந்த சந்தர்ப்பத்தில் நானும் அமிர்தலிங்கம் வீட்டிற்குச் சென்றேன் என்பது எனது நினைவுகளில் பதிந்துள்ளது.இவ்வாறான எந்தச் சந்திப்புக்களிலும் பற்குணம் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வேளைகளில், புதிதாக உருவான தமிழர் விடுதலைக் கூட்டணியுடனான அரசியல் தொடர்புகளையும் பற்குணம் கடுமையாக விமர்சிக்கிறார். கூட்டணியின் அரசியல் என்பது சந்தர்ப்பவாத அரசியல் என்றும் அதனால் நாங்கள் பயன்படுத்தப்படுவதாகவும் பற்குணம் விமர்சிக்கிறார். இந்த வேளைகளிலெல்லாம் எனக்குப் பிரபாகரன் சொல்வது தான் நியாயமாகத் தென்பட்டது. ஒருபக்கத்தில் அரச படைகள் மறுபக்கத்தில் தமிழர்கள் இதற்கு மேல் என்ன அரசியல் என்பது தான் பொதுவான மனோபாவமாக என்னிடமும் காணப்பட்டது. மத்திய குழுவின் அனைத்து உறுப்பினர்களும் பிரபாகரன் பக்கம்தான்.

பிரபாகரனுக்கும் பற்குணத்திற்கும் இடையேயான சச்சரவின் நடுவே நாங்கள் மௌனிகளாகவே இருந்தோம்.

www.tamilarangam.net

ஈரோஸ் இயக்கம் தம்மை அரசியல் ஆளுமை மிக்கவர்களாக கருதிக்கொண்டிருந்தனர். தமிழீழ விடுதலைப் புலிகளோ அரசியல் என்பதெல்லாம் தேவையற்றதாகவே கருதியிருந்தது. இந்தச் சூழலில் ஈரோஸ் என்ற அரசியல் இயக்கம் தமது இராணுவப் படையாகத் தமிழீழ விடுத்லைப் புலிகளை இணைத்துக் கொள்வதற்காக முயற்சி செய்து வந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அதாவது ஈரோஸ் அரசியல் தலைமை வழங்க நாமெல்லாம் அவர்களின் இராணுவக் குழுவாகச் செயற்படுவோம் என்று எதிர்பார்த்தார்கள். தம்பி பிரபாகரனும், நாமும் பற்குணத்தின் ஊடாக அவர்களின் நோக்கத்தை நிறைவேற்ற எத்தனிப்பதாகக் கருதினோம். பற்குணமும் பல தடவைகள் அவரது விவாதங்களூடாக இதனைத் தெரிவித்திருந்தார். பிரபாகரனைக் குற்றம்சாட்டும் கருப்பொருளாக இதுவே அமைந்திருந்தது.

தொடர்ச்சியான விவாதங்களின் பின்னர் பற்குணம் ஒரு கருத்தை முன்வைக்கிறார். அவர் தனியே பிரிந்து சென்று புதிய அமைப்பாக இயங்க விரும்புவதாகவும் அதற்காக 25 ரூபா பணமும் ஒரு கைத்துப்பாக்கியும் வழங்குமாறு கோருகிறார். இந்தக் கோரிக்கை வியப்பாக இல்லாவிட்டாலும் அதிர்ச்சி தருவதாக அமைந்தது என்னவோ உண்மைதான்.

பற்குணம் இந்தக் கோரிக்கையை மத்தியகுழுவில் தான் முன்வைக்கிறார். அப்போது பிரபாகரன் ஏதும் பேசவில்லை. மத்திய குழுக் கூட்டம் முடிவடைந்ததும் பிரபாகரன் எம்மைத் தனித் தனியே சந்திக்கிறார். அப்போது, இயக்கத்திலிருந்து விலகிச் சென்று புதிய இயக்கம் உருவாக்கினால் மரண தண்டனை என்பதை பற்குணம் மறந்துவிட்டுப் பேசுகிறார் என்றும், இவருக்கு மரண தண்டனை தான் தீர்வு என்றும் எல்லோரிடமும் கூறுகிறார்.

இந்த விடையம் பற்குணத்திற்குத் தெரியாது. அவர் தவிர்ந்த, நான் உள்பட்ட அனைத்து மத்திய குழு உறுப்பினர்களும்ன் அவர் கூறுயதை ஆமோதிக்கிறார்கள். நாம் ஒரு இராணுவக் குழு; அதற்கு இராணுவக் கட்டுப்பாடுகள் உண்டு; மீறினால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்; இயக்கம் முழுவதுமே அழிக்கப்பட்டுவிடும் என்ற கருத்துக்கள் தான் மேலோங்குகிறது. இப்போது நாம் அனைவருமே பற்குணத்தின் மரண தண்டனையை ஏற்றுக்கொள்கிறோம். அவர் கொல்லப்பட வேண்டியவர் தான் என்பது எம்மளவில் முடிபாகிவிட்டது.

இதனிடையே ஜெயவேல் என்பவர் கைது பொலீசாரின் வலைக்குள் சிக்கிவிடுகிறார். எம்மிடம் வாங்கிய பணத்தை வைத்து ஆடம்பரச் செலவுகள் செய்துவந்ததால் சந்தேகத்தின் பேரில் ஜெயவேல் முதலில் கைதுசெய்யப்படுகிறார். குளிப் பானதினுள் நஞ்சு வைத்துக் கொலைசெய்ய முற்பட போது தப்பித்துக்கொண்ட ஜெயவேல் இப்போது பொலீசாரின் விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறார். விசாரணைகளின் கோரத்தில் அவர் என்னையும் ராகவனையும் காட்டிக்கொடுத்து விடுகிறார்.

இதன் பின்னர் நான் தேடப்படுகிறவன் ஆகிவிடுகிறேன். எனது வீட்டைப் பொலீசார் சோதனையிடுகின்றனர்.
புன்னாலைக்கட்டுவனில் எனது வீட்டைச் சுற்றிவளைத்த பொலிசார், வீட்டைச் சல்லடை போட்டுத் தேடுகின்றனர். எனது பெற்றோரை மிரட்டி என்னைப்பற்றிய தகவல்களைக் கேட்கின்றனர். புத்தூர் வங்கிக் கொள்ளைக்கான திட்டமிடல் நடவடிக்கைகளை எனது வீட்டிலிருந்தே மேற்கொண்டோம்.

ஜெயவேல் ஊடாக இதனை அறிந்துகொண்ட காவற்துறைக்கு இந்த வழக்கில் நான் முக்கிய எதிரியாகிவிடுகிறேன். புன்னைலைக்கட்டுவனில்

www.tamilarangam.net

பல பகுதிகளிலும் எனது நடம்மாட்டம் தொடர்பான தகவல்களைத் திரட்டுகிறார்கள். இந்த அவசர நிலையைக் கருத்தில்கொண்டு ராகவன், பட்டண்ணா ஆகியோரை இந்தியாவிற்குச் செல்லுமாறு பிரபாகரன் கூறுகிறார். ராகவன் பட்டண்ணா ஆகியோர் புலிகளில் ஆதரவாளர்களாக இருப்பினும் ஜெயவேலுக்கு இவர்களின் தொடர்புகள் இருப்பிடங்கள் என்பன தெரிந்திருந்தது. இதனால் இவர்களுக்கு ஆபத்து நேரலாம் என்பதால் பிரபாகரனே இவர்களையும் கூட்டிச் செல்லுமாறு கோருகிறார் தங்கத்துரை யின் கடத்தல் படகு ஒன்றில் மன்னார் சென்று மன்னாரிலிருந்து ராமேஸ்வரம் செல்கிறோம்.

நான் நேசித்த தாய் மண்ணைப் பிரிந்த சோகத்தின் மத்தியில் இந்திய மண்ணிலிருந்த நம்பிக்கை அதன் மீதான மதிப்பாகவும் மாறியது. வெறும் உணர்ச்சிச் சமன்பாடுகள் தான் எமது சிந்தனையைத் தீர்மானிக்கும் வரம்புகளாகியிருந்த காலகட்டத்தில் இதைவிட வேறு எதையெல்லாம் எதிர்பார்க்க முடியும்?

அங்கிருந்து சேலத்திற்குச் செல்கிறோம். அங்கே பெரிய சோதி, சின்னச் சோதி என்றி அழைக்கப்படும் வல்வெட்டித்துறையச் சேர்ந்த இருவருடன் நாம் தங்கியிருந்தோம். இவர்கள் தங்கத்துரை குட்டிமணியின் கடத்தல்



குழுவைச் சார்ந்தவர்கள். எமக்கு வேறு உழைப்போ பணவசதியோ இல்லாத நிலையில் இவர்கள் தான் எம்மைப் பாதுகாக்கிறார்கள். உணவருந்துதுவதும், உறங்குவதும், தமிழ் சினிமாப் பார்ப்பதும் தான் எமது வேலையாக இருந்தது. சுமார் நான்கு மாதங்கள் வரை சேலத்திலேயே எமது நாட்களைக் நகர்த்துகிறோம்.

உலகம் முழுவதும் எவ்வாறு போராட்டங்கள் முன்னோக்கிச் செல்கின்றன, முற்போக்கு சக்திகளுடனான உறவு, ஏனைய ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் குரல்கொடுத்து அவர்களோடு கைகோர்த்துக் கொண்டு எமது தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தைப் பலப்படுத்தல் போன்ற எந்த விடயங்களைப் பற்றிய எந்த சிந்தனையும் எமக்கு இருந்ததில்லை. பிற்காலப்பகுதியில், புலிகளுடனான நீண்ட நாட்கள் கடந்துபோன பின்னர், அவற்றை எல்லாம் தெரிந்து கொண்ட போது தான் நமது தவறுகள் குறித்தும், புதிய அரசியல் திசைவழி குறுத்தும் சிந்திக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது.

அப்போதெல்லம் குறைந்த பட்சம் போராட்டங்கள் குறித்தும், அரசியல் குறித்தும், மார்க்சியம் குறித்தும் ஆயிரம் விடயங்களைப் படித்துத் தெரிந்துகொண்டாவது இருக்கலாம் என்று இப்போது வருந்துவதுண்டு. எமது குறுகிய உலகத்துள் எமக்குத் தெரிந்ததெல்லாம் தாக்குதலும் எதிர்த் தாக்குதலும் என்பது மட்டும்தான்.

இதனிடையே தாயகத்தில் பற்குணம் கொல்லப்படுவதற்கான முடிபு உறுதிப்படுத்தப்படுகிறது.

www.tamilarangam.net

அவ்வேளையில் பற்குணம் கொழும்பிற்கு செல்கிறார். கொழும்பில் வேலை பார்த்துக்கொண்டிருந்த எமது மத்திய குழு உறுப்பினரான நாகராஜா(வாத்தி), பற்குணத்தை புளியங்குழம் முகாமிற்கு அழைத்து வருகிறார். அங்கு இரவிரவாக பற்குணத்துடன் பிரபாகரன் மற்றும் மத்திய குழு உறுப்பினர்கள் நண்பர்களாகப் பேசிக் கொண்டிருக்கின்றனர். நள்ளிரவிற்குச் சற்றே பிந்திய வேளையில் பற்குணத்தோடு உரையாடிக் கொண்டு இருக்கையிலேயே அவரைத் தனது கைத்துப்பாக்கியால் பிரபாகரன் கொலைசெய்துவிடுகிறார். அவ்வேளையில் பேபி, தங்கா, நாகராஜா, குலம் போன்றோர் அங்கிருக்கின்றனர். பற்குணம் இறந்து போகிறார்.

துரையப்பா கொலைச் சம்பவத்திற்கான செலவுகளுக்காக தனது தங்கையின் நகைகளை அடகுபிடித்து பணம்கொடுத்த பற்குணத்தையே கொலைசெய்ய வேண்டியதாகிவிட்டது என்று பிரபாகரன் பின்னரும் பல தடவைகள் கூறி வருந்தியிருக்கிறார்.

இந்தச் சம்பவம் நிகழ்ந்த போது நான் சேலத்திலேயே இருந்ததால் இது எனக்கு உடனடியாகத் தெரியாது.

நாங்கள் இந்தியாவில் தங்கியிருக்கும் வேளையில் ஐக்கிய தேசியக் கட்சி அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வருகிறது. மறுபுறத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி பெரும் வெற்றியீட்டுகிறது. 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி பெற்ற அங்கீகாரமாக இத் தேர்தலின் வெற்றி கருதப்பட்டது. 1977 ஜூலை 21ம் பெரும்பாலும் எல்லாத் தமிழ் பேசும் மக்கள் வாழும் மாவட்டங்களும் பிரிவினைக்கான சுலோகத்தை முன்வைத்துப் போட்டியிட்ட கூட்டணிக்கு வாக்களிக்கின்றனர்.

இதே வேளையில் பிரதம மந்திரியாகத் தெரிவு வெற்றியீட்டிய  ஜூனியஸ் ரிச்சார்ட் ஜெயவர்த்தன, யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த பொலீசாருக்கு எதிரான கொலைச் சம்பவங்களுக்குப் பொறுப்பான குழுக்களுக்கும், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் நேரடியான தொடர்புகள் இருப்பதாகவும், இந்த இரு பகுதியினருமே அழிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைக்கிறார்.

இதே வேளை வன்முறையாக நான்கு பொலீசார் யாழ்ப்பாணத்தில் நடந்த கானிவேல் ஒன்றினுள் அனுமதிசீட்டு இல்லாமல் பிரவேசிக்க முயன்ற போது உருவான தர்க்கத்தில் மக்களால் தாக்கப்படுகிறார்கள். இதனைத் தொடர்ந்து உருவான தமிழ் சிங்கள மோதல், இன வன்முறையாக மாற்றம் பெறுகிறது. 12ம் திகதி ஆகஸ்ட் 1977 ஆம் ஆண்டு ஆரம்பமான இவ்வன்முறைகள், அரசின் மறுதலையான ஆதரவுடன், இனப்படுகொலை வடிவத்தை கொள்கிறது.300 தமிழர்கள் சிங்களக் காடையர்களால் கொல்லப்படுகிறார்கள். தமிழர்களுக்கு உரிமை தருவதாகப் பேசி ஆட்சிக்கு வந்திருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன, தமிழர்களதும் தமிழர் விடுதலைக் கூட்டணியினதும் பிரிவினைக் வாதத்தில் ஆத்திரமடைந்த சிங்கள மக்களின் எழுச்சியே இவ் வன்முறைகள் என்று வெளிப்படையாகவே

www.tamilarangam.net



கூறுகிறார். இந்தியாவிலிருந்து இதை அறிந்த நாம் வெறுப்பும் கோபமும் அடைகிறோம்.

30 நாட்கள் நீடித்த இந்த வன்முறைகளின் சில நாட்களில் பிரபாகரன், மாவை சேனாதிராஜா, காசியானந்தன் ஆகியோர் தங்கத்துரை குட்டிமணியின் கடத்தல் படகு மூலமாக இந்தியாவிற்கு வருகின்றனர்.

பேபி சுப்பிரமணியம், தங்கா போன்றோர் ஊடாக நான் இந்தியாவிலி இருக்கும் வேளையில் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் புலிகளின் தொடர்பு வலுப்பெற்று வளர்ச்சியடைகிறது. பற்குணத்தின் மறைவிற்குப் பின்னர் புலிகளின் மத்திய குழுவுடனான தமிழர் விடுதலைக் கூட்டணியின் தொடர்புகள் வலுப்பெறுகின்றன. தேர்தல் வன்முறைகள், ஜெயவர்தன அரசு வெளிப்படையாகவே கட்டவிழ்த்துவிட்ட வன்முறைகள் என்பவற்றின் தொடர்ச்சியாக இச்சந்திப்புக்கள் மேலும் கூட்டணியுடனான இறுக்கத்தை வலுவாக்குகின்றன. பிரபாகரன் நான் இருந்த சேலத்திற்கு வருகிறார். இதே வேளை பேபி சுப்பிரமணியம் விமான மூலமாக இந்தியாவிற்கு வருகிறார்.

நான் இந்தியாவில் இருந்த வேளையில் எமது மத்தியிகுழுவும்



தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஒரு எழுதப்படாத உடன்பாட்டிற்கு வருகின்றனர். தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியல் அமைப்பு என்றும், இளைஞர் பேரவை வெகுஜன அமைப்பு என்றும், புலிகள் இவற்றிற்கான இராணுவ அமைப்பு என்றும் முடிபிற்கு வருகின்றனர்.

தேர்தல் வெற்றியும், தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளும், அவற்றிற்கு எதிரான தமிழர் விடுதலைக் கூட்டணியின் வீராவேசப் பேச்சுக்களும் புலிகள் இந்த முடிபிற்கு வரக் காரணமாக அமைந்தது. இது தொடர்பாக தம்பி இந்தியா வந்ததும் என்னிடம் கூறுகிறார். நானும் அவற்றை எந்த மறுப்பும் இன்றி ஏற்றுக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் இருந்த காலப்பகுதியில் மதுரையில் நடராசா என்ற ஓவியரைப் பிரபாகரன் சந்திக்கிறார். அவர் தான் விடுதலைப் புலிகள் சின்னத்தை வரைந்து கொடுக்கிறார்.

சேனாதிராஜா, காசியானந்தன, பிரபாகரன் மூவரும் கலைஞர் கருணாநிதியை மரீனா பீச்சில் சந்திக்கிறார்கள். அச்சந்திப்பிற்கு

www.tamilarangam.net



சந்தர்ப்பவசமாக நான் செல்லவில்லை ஆனால் என்னோடு தங்கியிருந்த பட்டண்ணா சென்றார் என்பது நினைவிற்கு வருகிறது. இச் சந்திப்பிற்கான ஏற்பாட்டை சேனாதிராஜா தான் ஒழுங்குபடுத்தியிருக்க வேண்டும்.

இவ்வேளையில் இலங்கையில் எமது வழமையான இயக்க வேலைகள் முடங்கிப் போய்விடக் கூடாது என்பதற்காக நான் இலங்கைக்குப் போவதாக முடிவெடுக்கப்படுகிறது. சின்னச் சோதி நான் திரும்பிச் செல்வதற்கான படகை ஒழுங்கு செய்கிறார். மயிலிட்டிக்குப் படகு வந்து சேர்கிறது. மறுபடி சொந்த மண்ணில் கால்பதித்த உணர்வு மேலிடுகிறது!

பகுதி நான்கை வாசிக்க..

பகுதி மூன்றை வாசிக்க..

பகுதி இரண்டை வாசிக்க..

பகுதி ஒன்றை வாசிக்க..

இன்னும் வரும்..

## 57 கருத்துக்கள்

1. *THOTTA*
   Posted on 01/19/2010 at 8:44 am

   வணக்கம் ஜயர்.. கட்டுரையின் இடையில் வரும் சில படங்களில் உள்ளவர்கள் எனக்கு யார் என்றே தெரியவில்லை..முடிந்தால் அதன் கீழ் பெயர் போட முடியுமா.............................பொதுவாகா புலிகள் மீது எப்போதுமே ஒரு குற்றசாட்டு இருக்கு................அவெர்கள் மாற்றுக்கருத்துள்ளோரை அழிக்கிறார்கள் எண்டு......விடுதலை வேண்டி ஊன், உறக்கம் இல்லாமல் ,உயிரைக் கொடுத்து போராடிக்கொண்டு இருக்கும் போது..போலியான விடுதலை விரும்பிகள்......தானும் ,தனது குடும்பவும் வாழ விடுதலை அமைப்பை பயன்படுத்துவதை யாருமெ ஏற்கமுடியாது.அத்ற்கு நல்ல உதாரணம் ஆரம்பத்தில் மத்தியகுழுவில் இருந்த சில பேர் , தமது குடும்பம் கஸ்டம் ,காசு தந்தால்தான் தம்மால் விடுதலைக்கா உழைக்க முடியும் எண்டு சொல்லி காசையும் வேண்டி ,கடசியில் என்ன சய்தார்கள் எண்டு ,இக் கட்டுரையை தொடர்ந்து வாசிபோரிற்கு புரியும்.,விடுதலைக்க்காக தொடர்ந்து உழைக்கும்நீங்களும் ,ராகவனும் அந்தபணியைத்தொடராமல் விட்டுப்போகவேண்டியநிலமை ஜெயவேல் அன்று கொல்லப்படாததாலேயே ஏற்பட்டது.இன்று பிரீந்து

www.tamilarangam.net

போகநினைக்கும் பற்குணத்தை
விட்டால்..பிரபாகரனுக்கும்,புலிகளிற்கும் நிட்சியமாக
உங்கள்நிலமையே ஏற்படும்.அவெர் கொல்லப்படவேண்டியவரே.

Reply

2. *Shan Nalliah gandhiyist norway*
Posted on 01/19/2010 at 9:28 am

GREAT! YOU ARE TELLING TRUTH! GOD BLESS YOU FOR THAT!
WE SHD LEARN FROM PAST MISTAKES! TRY TO
UNDERSTAND,TRUST,INCLUDE EACH OTHERS! RESPECT ALL OPINIONS, BUT
DECIDE BY DEMOCRATIC METHODS BY VOTING! THEN MUST ACCEPT AND
FOLLOW BY ALL! PLEASE WRITE ABOUT GANDHIYAM
DR.S.RAJASUNDARAM'S ROLE IN UNITING VP/UMA!
ALL TAMILS WITH
INTELLIGENCE,KNOWLEDGE,CONSCIENCE,NEUTRALITY,VISION SHD LEAD
TAMILS IN FUTURE!OTHERS SHD FOLLOW!
DEMOCRACY,HR,FREEDOM /SPEECH,DEBATE ETC,EQUALITY,POLITICAL
TACTICS,DIPLOMATIC MOVES WILL HELP TAMILS TO THEIR GOAL!

Reply

3. *Eraavanan*
Posted on 01/19/2010 at 12:01 pm

ஐயோ ஐயோ கருத்தைக் கருத்தால் வெல்ல முடியாத அரசியல்
வங்குரோத்துகளுக்கு சாமரம் வீசும் தோட்டா அவர்களே! ஐயர்
ஒன்றையும் விட்டுப் போகவில்லை. இப்போது அவரிடம் அரசியல்
ஞானமும் ஆற்றலும் சிறப்பாக இருக்கிறது. இப்போது அவரிடம்
துப்பாக்கி இருந்தால் அது சுடாது. மாறாக அது பாதிக்கப்பட்ட மக்களின்
விடுதலைக்காகப் போராடும். ஐயர் எடுத்ததற்கெல்லாம் சுடாததால்
இன்று எழுதுகிறார். எடுத்தவுடன் சுடுவதே மேலென்று அறிவிலியாக
சுட்டவர்களெல்லாம் இப்போது எங்கே தோட்டா? உமது கருத்தைப்
பார்க்கையில் உமக்குள்ளும் சாகவேண்டிய குட்டிப்புலி
படுத்திருக்கிறது தோட்டா!

Reply

- *THOTTA*
  Posted on 01/19/2010 at 7:45 pm

  இராவணன்..உங்கள் எல்லொருக்கும் 100% தப்பு பண்ணாதா , 100%
  பொய் பேசாத......கொலை ,கொள்ளை பண்ணாத, தப்பு சய்தால்
  மன்னிக்கிற , இப்படி எந்த தீய பழக்கமும்
  இல்லாத..................................தலைவர்...................தான்
  வேணும் எண்டால்.....? உங்களைப் போல ஆட்கள்
  எல்லாரும்.........................ஆ..................... எண் டு வானத்தைப்
  பாருங்கோ.......தேவதூதர் ஒருவர் வருவார்..வந்து...தமிழ் ஈழம்
  பெற்றுத் தருவார்!

  Reply

  - *chandrasegaran*
    Posted on 01/19/2010 at 8:34 pm

    ஐயா துப்பாக்கி இல்லாத( தோட்டாவே தவறுக்கெல்லாம்
    தண்டனை
    மரணமா

www.tamilarangam.net

Reply

4. *thamilmaran*
Posted on 01/19/2010 at 1:13 pm

கடந்த காலச் சரித்திரமேநிகழ்காலச் சோகஙகலுக்கு காரணம்.முதல்ல கோப்பப்பட்டு விட்டு பின்னர் மன்னிப்பு என்பதை தலைவர் மாட்ரி இருந்தால் அது இழப்புக்கலை குறைத்திருக்கும் ஆனால்நானும் ஒரு தலைவர் என்ரு அவர் கதைக்க வெலிக்கிட்டதில் இருந்தே அவட்ர மண்டைக்க கழிமண் என்ரு தெரிந்து போயிட்ரு.இதில பாடங்கல் என்ரு ஒரு அரிவுஜிவி சொல்லுது.அண்டைக்கே இவர் தலைமைக்கு சர்யயில்ல என்ரு அந்த பரமாத்தா சொல்லிப் போட்டுது அதுக்கு விழுந்தது சூடு.இன்னும் எத்தனை விலையாட்டு இருக்கோ யாருக்கு தெரியும்?

Reply

5. *thurai*
Posted on 01/19/2010 at 4:38 pm

பிரபாகரன் கொலைகள் செய்யத் தொடங்கிய்தே தன் உயிரைக்காக்கவும்,
பயத்தினாலுமேயாகும். தமிழினத்தைப் பற்றியோ ,பின் விளைவுகளைப்
பற்றியோ
சிந்திக்கவில்லை. இதனையே புலங்களில் வாழும் புலியின் ஆதரவாளர்கள்
செய்கிறார்கள். தண்ட வாளத்தில் படுப்பது, பெரும்டசாலைகளை மறிப்பது
போன்றவை தமிபியின் சிந்தனையிலிருந்து வந்தவையே.

துரை

Reply

   - *THOTTA*
     Posted on 01/19/2010 at 8:14 pm

     தண்டவாளத்தில் படுப்பதும் ,பெரும் சாலையை மறிப்பதும்….ஆயுதப்போரட்டமில்ல…அது ஜெனநாயகப்போராட்டமே……பிராபகரனை உருவாக்கியது.. நீரும் நானுமோ………ஜ்யரும் ராகவனுமோ…. , உமாவும்,பற்குன்முமோ அல்ல………..சிங்களவரும், சிங்கள அரசுகளுமே……….உருவாக்கினவன் எப்படியோ…… உருவாகினவனும் அப்படியேதான் இருப்பான்.பிரபாகரன் தமிழரைப் பற்றிச் சிந்திக்காட்டியும்……தமிழர் தங்களைப் பற்றி சிந்தித்ததின் விளைவே….இத்தனை வருடமும் அவரோடு நின்றார்கள் ….அவரின் செய்கைகளை ஏற்றார்கள்….தலைவர் பிராபகரனையும்,புலிகளையும் எதிர்க்கிறேன் எண்டு சொல்லி , நீங்கள் எல்லாரும்…….மல்லாக்காக் கிடந்து…….எச்சி ..துப்புறீர்கள்…..அவ்வளவே…..

     Reply

       - *thurai*
         Posted on 01/20/2010 at 8:18 am

         ஈழத்தமிழர் உருமைப் போராட்டத்தை சிங்கள அரசு பய்ஙரவாதமாக்

www.tamilarangam.net

உலகிற்குக் காட்டி புலிகளை அழிக்க, முற்பட, அப்பாவி மக்களை

பாதுகாப்பிற்காக தடுத்து வைத்து, பலிகொடுத்து புலிகளைக் காப்பாற்ரவே
தண்டவாளத்தில் உலக்மெங்கும் படுத்தார்கள்.
இன்று உலகத் தமிழரனைவரும் பயங்கரவாதிகளாக்கி விட்டு

உல்லாசமாக சுருட்டிய பணத்தில் புலிகள் வாழ்கிறார்கள்.

இவர்கள் தான் தலைசிறந்த தல்வனின் வாரிசுகள்.

துரை

Reply

- *THOTTA*
  Posted on 01/22/2010 at 8:48 am

  நண்பர் துரை அவெர்களெ….. நீங்கள் ஒரு சதம் போராட்டத்துக்கு கொடுத்தீர்களோ……
  லட்சியத்திற்காக..லட்சக்கணக்கில் குடுத்த நாங்களே பேசாமல் இருக்கும்போதுநீங்கள் ஏன் நீங்கள் கவலைப்படுகிறிர்கள். அ மேரிக்காவில் போராட்டத்துக்கு ஆயுதம் வாங்கமுற்பட்டவர்களிற்கு 20 உம் 25 வருசமும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிறிற்கிறது. பிரான்சில் போராட்டத்திற்கு காசு சேர்க்க முற்பட்டவர்களிற்கு 15 தொடக்கம் 20 வருசம் ஜெயில் தீர்ந்திற்கிறது…அவுஸ்திரியாவிலும் வழக்கு தொடரபட்டிருக்கிறது..இப்படி 30 வருசமாய் ஒயாது உழ்ச்சவை இனியாவது சொகுசாய் இருக்கட்டுமே..ஆனால் பாருங்கோ புலிகழை எதிர்க்கிறேன் எண்டு 30 வருசமாய் ராஜாதி ர்ாஜா வாழ்க்கை வாழ்பவைபற்றி உங்கட கண்ணுக்கு தெரியாதோ……………………..

  Reply

  - *thurai*
    Posted on 01/22/2010 at 4:42 pm

    தோட்டா,

    விடுதலை பற்றிப் பேசி, சிங்களவரிற்கு, தமிழரைப் பலி கொடுத்தும்,, புலத்திலுள்ள வர்களை மறியலில் வைத்தும் விட்டீர்கள்.
    இனி தலைவரின் வருகை ஏன்?

    துரை

  - *shanthan*
    Posted on 01/24/2010 at 10:55 am

    தப்பு செய்த நீங்கள் இன்று மக்களிடம் மன்னிப்பு கேளாமல் மீண்டும் எப்போது இப்படி வருமானத்திற்காக இலவு காத்த கிளி மாதிரி காத்திருக்கும் நீங்கள் இலட்சக்கணக்கில் கொடுத்ததாக யாருக்கு கதை விடுகின்றீர்கள்.

www.tamilarangam.net

6. *thass*
   Posted on 01/19/2010 at 4:50 pm

   ஈழப் போராட்ட வரலாற்றில் தன்நலம் இல்லாமல் உண்மை பேசுகின்ற முதல் மனிதன் ஐயராகத்தான் இருக்க முடியும். தமிழின வரலாறு ஐயரை மறக்காது! தனது இமேஜைப் பற்றி கூட கவலைபடாமல் ஐயர் கூறும் உண்மைகள் உலகத்தின் ஏனைய போராட்டங்களுக்கும் உதவியாக இருக்கும். வாழ்த்துக்கள் ஐயரே!

   Reply
7. *proffessor*
   Posted on 01/19/2010 at 5:06 pm

   ஆக மொத்தத்தில் பற்றிக், மைக்கல் இருவரின் கொலைகள் தொடர்பில் முன் வரலாறு தெரியாதவர்களுக்கு கொலைகளுக்கான மூலம் அறியக்கூடியபடி ஐயரின் பதிவு உணர்த்தியுள்ளது.

   அமிர் பிரபா தொடர்பும் பின்னர் இதே அமீர் ஏன் கொல்லப்பட்டார் என்பதற்கு சாட்சி சொல்ல எவரும் இல்லாமல் போய்விட்டாலும் அமிரின் கொலைக்கும் காரணம் இல்லாமல் இருக்காது.

   Reply
8. *Alex Eravi*
   Posted on 01/19/2010 at 6:31 pm

   ஐயர் அவர்களே!

   "பிரபாகரனைப் பொறுத்தவரை தேனிர், கோப்பி போன்றவற்றை கூட அருந்தாத தூய ஒழுக்கவாதியாகவே காணப்பட்டார். அவரைப் பின்பற்றிய எம்மில் பலர் இந்த ஒழுக்கவாதத்தை கடைப்பிடித்திருந்தனர்." என்று குறிப்பிட்டிருந்தீர்கள், அதுமட்டுமல்ல தன்னுடன் சேர்ந்தவர்களுக்கும் பால் தான் அருந்தக் கொடுப்பார். உதாரணத்திற்கு நினைவில் வருபவை, சுந்தரம் கொலையின் பின், இராசுப்பிள்ளையுடன் இருந்து பயிற்சியெடுத்து தனியாக 10 பேருடன் பிரிந்து தமிழ்நாடில் மனித வேட்டையாடி திரிந்த வேளையில், திருச்சியில் வைத்து கழுகுப்படையை சேர்ந்த இராஜ்மோகன் அண்ணர் அவர்களை கடத்தி சென்று ஒரு மாதத்திற்கு மேல் வைத்திருந்து முகுந்தனிற்கு அவரும் அவரை சேர்ந்தவர்களும் உதவி ஒன்றும் செய்யக்கூட்டாது என்ற நிபந்தனையில் விடுவிக்கப்பட்ட பின், பாண்டி பஜார் துப்பாக்கி சூட்டுச் சம்பவத்திற்குப் பின் பிடிபட்டு வீட்டுக்காவல் முறையிலான பிணையுடன் கூடிய நிபந்தனையில் விடுவிக்ககப்பட்ட பின் ஒவ்வொரு முறையும் சென்னைக்கு வழக்கிற்கு செல்லும் போது எந்த பஸ்ஸில் எந்தனை மணிக்கு திருச்சிக்கு வருவதாக இராஜ்மோகன் அண்ணர் அவர்கட்கு அறிவித்து விட்டு வரும்போது, பஸ்நிலையத்தில் எல்லோருக்கும் தேநீர், கோப்பி தவிர்த்து பால்தான் ஓடர் பண்ணுவார், அதுவும் மற்றவர்களை பணம் கொடுக்க விடாமல் தான் தான் பணம் கொடுக்கவேண்டும் என்று அடம் பிடிக்கும் பழக்கம் உடையவர். இதை பின்னால் கழகத்தில் இருந்த சுழிபுரத்தை சேர்ந்த பாலமோட்டை சிவம் அவர்களுடன் பகிரும்போதும் அறிந்துகொண்டேன்.

   ஓர் மனிதனிற்கு இரண்டு பக்கங்கள் உள்ளது என்ற அடிப்படையில் பிரபாகரன் அவர்கட்கும் இரண்டு பக்கங்கள், அவருக்கென்று சில தனிப்பட்ட கொள்கைகள் இருந்தன.

www.tamilarangam.net

"சில நேரங்களில் சில மனிதர்கள்" என்று ஜெயகாந்தன் அவர்கள் எழுதியமாதிரி, சந்தர்பங்களும் சூழ்நிலைகளும் தான் மனிதனை மாற்றுவது.

இன்று 30 வருடங்களிற்கு முன் நடந்தவைகளை சரியாக ஜாபகப்படுத்தி எழுதுவது சுலபமல்ல, தங்கள் இவ் ஓர் ஆவணமான எழுத்து, இடையூறுகள் ஒன்றுமில்லாமல் தொடரவேண்டும், அத்துடன் உட்கொலைகள் பிரபாகரன் தலைமையில் மட்டுமல்ல, கருத்துக்ககளை கருத்துக்களால் எதிர் கொள்ள முடியாத மாற்று கருத்து கொண்டவர்கள் தலைமையிலும் அண்மைய காலம் வரை நடைபெற்றுக்கொண்டு இருந்தன, தற்போது அது வடிவத்தை மாற்றி மிரட்டல்கள், முதுகுப்பின் குத்துவது என்று காலத்திற்கு ஏற்ற மாதிரி தொடர்ந்தவண்ணமேயுள்ளது.

வரலாறுகளும் அனுபவங்களும் பாடமாகட்டும்!

எல்லாவற்றிகும் மனித நேயம் வேண்டும்!

நன்றி!

- அலெக்ஸ் இரவிவர்மா.

பிற்குறிப்பு:

மன்னிக்கவும், தங்களது முன்றாம் பாகத்தில் "தங்களது இரண்டாம் முன்றாம் பாகத்தில் குறிப்பிட்டிருந்த மட்டக்களப்பை சேர்ந்த மைக்கல் என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டு, எரிக்கப்பட்ட பின்னரும் அவரின் தாயாருக்கு அவர் உயிருடன் இருந்து எழுதியமாதிரி கடிதமும், செலவிற்கு பணஉதவியும் சென்றுகொண்டிருந்தது உண்மையா?" என்று தெரிவித்திருந்தேன். தற்போது ஜாபகம் வருகிறது பற்குணம் கீரிமலையை சேர்
ந்தவறேன்றால் அது பற்குணமாக இருக்க வேண்டும்.

Reply

9. *J*

 Posted on 01/19/2010 at 8:25 pm

 http://www.lttepress.com/

 Prabha is alive and SAfe BEWARE

 Reply

10. *thass*

 Posted on 01/19/2010 at 8:27 pm

 தோட்டா,
 பிரபாகரனை உருவாக்கியது அடக்குமுறைதான். அதற்கு எதிரான போராட்டத்தை அழித்ததும் பிரபாகரன் தான். ஐயர் கூறுவது தவறுகளில் இருந்து படியுங்கள் என்று தானே தோட்டா. நீங்களோ தவறுகளை இன்னும் இன்னும் செய்ய வேண்டும் என்று சொல்கிறீர்கள். என்ன தோட்டா இது ?

 Reply

11. *எதிர்வு*

 Posted on 01/19/2010 at 9:20 pm

www.tamilarangam.net

ஐயரே!

பிரபாகரனுக்கோ,எமக்கோ இலங்கை அரசிற்கு எதிரான இன்னொரு இயக்கம் வளர்வதில் எந்த பய உணர்வோ, காழ்ப்புணர்வோ அன்றைய சூழலில் இருந்ததில்லை என்பதை விட பாலஸ்தீன இராணுவப் பயிற்சி,ஆயுதக் கொள்வனவு என்ற ஆசை காட்டி ஈரோசால் வாங்கப்பட்ட பணம் என்று சொன்னால் உண்மை ஒருபடி உயர்ந்து நிற்குமல்லவா?
ஜெயவேலை கொலை செய்ய முயன்று தோற்றுப் போய் பொலிசாரிடம் காட்டி கொடுக்கப்படவில்லை என்று உறுதியாக சொல்லமுடியுமா?
அப்போதெல்லம் குறைந்த பட்சம் போராட்டங்கள் குறித்தும், அரசியல் குறித்தும், மார்க்சியம் குறித்தும் ஆயிரம் விடயங்களைப் படித்துத் தெரிந்துகொண்டாவது இருக்கலாம் என்று இப்போது வருந்துவதுண்டு என்று எழுதி உள்ளீர்கள்.தெரிந்து இருந்தால் உயிரே இருந்திருக்காது என்று பெருமைப்படுங்கள். இறுதியாக ஆரம்பத்திலிருந்தே ஆமாஞ்சாமிகளாக மத்திய குழுவொன்று செயற்பட்டதை பட்டவர்த்தனமாக தெளிவுபடுத்தியுள்ளீர்கள்.
நன்றி.

Reply

12. *Eraavanan*
Posted on 01/19/2010 at 10:18 pm

ஐயா தோட்டா! எனக்கு நீர் தம்பிபோல் உள்ளது. அதை உமது எழுத்து> கருத்து நடையிலிருந்து புரிந்துகொண்டேன். நிமிர்ந்து கிடந்தவாறே துப்பினால் அது எனக்குமேல் வீழும் என்ற அறிவே இல்லாமற்தான் இதுவரை நடந்துமுடிந்த தமிழீழ விடுதலை என்ற போராட்டம் இடம்பெற்றது. அதனை நீர் ஏற்றுக்கொள்ளும். எனைப் போன்றோரும் முன்பு அப்படித் துப்பியவர்கள்தான். அது பிழையென்று தெரிந்ததும் எமது செயற்பாட்டை மாற்றிவிட்டோம். தம்பி தோட்டா அமைதி. அமைதி. நாம் பல தடவை கேட்டும் எழுத விரும்பாத ஐயர் தற்போது எழுதுகிறார் என்றால் அதற்கான காலம் கனிந்திருப்பதாக அவருக்குத் தெரிந்திருக்கிறது. அவரின் இடத்தில் நீர் இருந்தால் அவர் அரசியற் தெளிவின்றி அந்தக் காலத்தில் இருந்ததுபோல் ஆகும். சரி சரி தம்பி தோட்டா அந்தக் குட்டிப் புலியை இனியாவது காட்டில் விடும். அது சுதந்திரம்தேடி அங்கே அலையட்டும். நான் எனது விடுதலைக்காக நானே போராடுபவன். எந்தத் தேவ தூதரையும் எதிர்பார்ப்பவன் அல்ல. அரசியலற்ற அவசரப் போக்கும் ஆத்திரமுமே இதுவரைக்கான காரணங்கள். அதுபோல் நீரும் அவசரப்படாமல் ஆத்திரப்படாமல் உண்மைகளை உணர்ந்துகொள்ளும். நன்றி தம்பி.

Reply

- *solo*
  Posted on 01/26/2010 at 7:07 am

  சரி, உங்கட யொசனைய சொல்லுங்கொவன்

  Reply

13. *Guru.Radhakrishn an,Nellikuppam--607105 --Cuddalore District*
Posted on 01/20/2010 at 6:05 am

கண் கெட்ட பின் சுரியநமஷ்காரம் . .

Reply

www.tamilarangam.net

14. *sayantha*
    [Posted on 01/20/2010 at 7:53 am]

    மயிரிழையில் தப்பி தலைமைப்பொறுப்பை பற்குணம் எடுத்திருக்கலாம். இவ்வளவு இழப்புகள் வந்திராது. அதுசரி ஈழப்போராட்டத்தையும் தமிழர் தலைவிதியையும் வெளச்சக்திகள் தீர்மானிக்கும்போது யாரைக்குறை சொல்லி என்ன பயன்?

    Reply

    - *SRIRAM*
      [Posted on 01/22/2010 at 8:27 am]

      ஓம் ..மயிரிழையில் தப்பிய உங்கட டக்கிளசும், கருணாவும் மற்ரதுகளும் இங்க எங்களுக்கு சய்யிற அருமை பெருமைகளை பாத்துக்கொண்டுதானே இருக்கிறம். மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி எண்டு சொல்லிக் கொண்டு சிங்கள தலைவர்களின் ஒளிந்துகொண்டு செய்யிற கூத்தை..........மற்றது காரிலும் பாரிலும் திரியுது. இதுகள் தான் எமக்கு விடுதலை வேண்டித் தரப் போகினமாம்?

      Reply

      - *thurai*
        [Posted on 01/22/2010 at 4:59 pm]

        தமிழர் கேட்பது தமிழரைத் தமிழரே அடக்கியாள்வதற்கான, அதிகாரம்.
        சிங்கள மொழி படிக்கமாட்டோம் ஆனால் உலகமொழி அனைத்தும்
        படிப்போம். காலி வரை சென்று கடைகள் போட்டு வியாபாரம் செய்வோம்
        ஆனால் வவுனியாவரை தான் சிங்களவன் வரலாம். இந்த கெட்ட குறுகிய குணமுள்ளவர்களிற்கும் விடுதலைக்கும் என்ன சம்பந்தம்.

        துரை

        Reply

15. *proffessor*
    [Posted on 01/20/2010 at 11:41 am]

    அமிர்தலிங்கம் தனது ஆதரவாளரான சுந்தரத்தின் தந்தையாரான சதாசிவம் மூலம், சுந்தரத்துக்கு நெருக்கடி கொடுத்து, 'புதிய பாதை' பத்தி;ரிகையை நிறுத்திவிட பல வழிகளில் முயன்றார். சுந்தரம் அமிர்தலிங்கத்தின் மிரட்டல்களுக்கு அடிபணிந்து விடவில்லை. சுழிபுரத்தை சேர்ந்த சுந்தரம், தனது பத்திரிகையின் வெளியீட்டாளராக தனது ஊரைச் சேர்ந்த சுரேந்திரன் என்பவரின் பெயரை பத்திரிகையில் போட்டிருந்தார். அதை அவதானித்த அமிர்தலிங்கம், தனது இன்னொரு ஆதரவாளரான சுரேந்திரனின் தந்தையாரை அணுகி, அவரது மகனை 'புதிய பாதை' பத்திரிகை வெளியீட்டிலிருந்து விலகி விடும்படி நெருக்குதல் கொடுக்க ஆரம்பித்தார். தந்தையின் நெருக்குதலைத் தாங்க முடியாத சுரேந்திரன், தனது சம்மதம் இன்றியே தனது பெயர் பத்திரிகை வெளியீட்டாளராகப் போடப்படுகிறது என்று ஒரு பொய்யை தந்தையிடம் கூறித் தப்ப முயன்றார். அதை உண்மை என நம்பிய அவரது தகப்பனார், அவ்விடயத்தை அமிர்தலிங்கத்திடம் தெரிவித்தார்.

www.tamilarangam.net

அதற்கு அமிர்தலிங்கம் அவருக்கு சில பாதகமான ஆலோசனைகளை வழங்கியதாக நாம் பின்னர் சுந்தரத்தின் மூலம் அறிந்தோம்.

